தேர்வுப்பணிகளுக்கான கையேடு – மார்ச் 2020

# HANDBOOK ON EXAMINATION DUTIES & RESPONSIBILITIES – MARCH 2020

அரசுத் தேர்வுகள் இயக்ககம்

கல்லூரி சாலை

சென்னை 600 006.

# CHAPTER- VII

# பறக்கும் படை உறுப்பினர்களின் நியமனமும் கடமைகளும்

# VII. பறக்கும் படை உறுப்பினர்களின் நியமனமும் கடமைகளும்

1. தேர்வுப் பணியில் நல்ல அனுபவமும், மிக்க நேர்மையும் வாய்ந்த துடிப்பான (குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம் உள்ள) ஆசிரியர்களைப் பறக்கும் படை உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும். பெண் தேர்வர்களை சோதனையிட பெண் ஆசிரியர்களையும் பறக்கும்படை உறுப்பினர்களாக நியமித்தல் வேண்டும்.

2. பறக்கும் படையில் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் மிக நேர்மையுடன் உண்மையான முறையில் செயல்படுபவர்களாக இருத்தல் வேண்டும். எவரிடத்திலும் அச்சமின்றியும் அதே சமயத்தில் தமக்களிக்கப்பட்ட பொறுப்பினை எல்லை மீறாமல் செயல்படுபவர்களாகவும் இருத்தல் மிகவும் அவசியம்.

3. முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் தனித்தனியே அமைக்கும் பறக்கும் படைகள் ஒரே நேரத்தில் ஒரே தேர்வு மையத்தையே தேர்ந்தெடுத்து பார்வையிடுவதைத் தவிர்த்து வெவ்வேறு தேர்வு மையங்களைப் பார்வையிட ஏதுவாக முன்கூட்டியே சீரான முறையில் திட்டமிட்டுச் செயல்படவேண்டும்.

4. அடிக்கடி புகார்களுக்கு இடமளிக்கக்கூடிய தேர்வு மையங்களை பறக்கும்படை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும்.

5. அனைத்து தேர்வு மையங்களுக்கும் 10 அறைகளுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் நிலையான படை (Standing Squad) அமைத்து தீவிரமாகக் கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

6. தேர்வு மையத்தில் ஒழுங்கீனச் செயலில் ஈடுபட்டு பறக்கும் படையினரால் கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வுகள் குறித்து செய்தித்தாட்கள் மூலம் வெளியிடப்பட்டால் ஒழுங்கீனச் செயல்கள் நடைபெறுதல் பெருமளவு குறைக்கப்பட வாய்ப்பு உள்ளதால், அதுகுறித்து ஆய்வு அலுவலர்களிடம் தெரிவித்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. பறக்கும்படை உறுப்பினர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் விருப்பு வெறுப்பின்றி நேர்மையான முறையில் பணியாற்றிட வேண்டும்.

8. பறக்கும் படையினர் தங்களது பணியை ஆற்றும்போது தேர்வெழுதும் மாணவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாவண்ணம் பணியாற்ற வேண்டும்.

9. பறக்கும் படையினர் ஒழுங்கீனச் செயலில் ஈடுபட்டோரை கையும் களவுமாகப் பிடிக்கும்போது தேர்வரிடமிருந்து கைப்பற்றிய விடைத்தாள் மற்றும் ஏனைய ஆவணங்களில் சம்பந்தப்பட்ட தேர்வராலேயே அன்னாரின் பதிவெண்ணைக் குறிப்பிடச் செய்து அவரது கையொப்பத்துடன் தங்களது அறிக்கையையும் தெளிவாக எழுதி முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

10. பறக்கும் படை / நிலையான படை குறித்த நேரத்தில் தேர்வு மையத்திற்கு சென்று தேர்வு அறைகளை ஒழுங்கீனச் செயலுக்கு இடமளிக்கா வண்ணம் ஆய்வு செய்து உறுதிப்படுத்த வேண்டும்.

11. பறக்கும் படை / நிலையான படை உறுப்பினர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் கையொப்பத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கி, தேர்வு மையப் பார்வையிடலுக்கு அவற்றை கட்டாயமாக அணிந்து செல்ல வேண்டும்.

12. பறக்கும் படை / நிலையான படை உறுப்பினர்கள் தேர்வு மையத்திற்கு பார்வையிடச் செல்லும்போது சுமுகமான முறையில் பணியாற்றுமாறு அறிவுறுத்தப்பட வேண்டும்.

13. பறக்கும் படை / நிலையான படை உறுப்பினர்கள் தேர்வு மையத்தின் அன்றாட நிகழ்வுகளை படிவத்தில் பூர்த்தி செய்து ஆய்வு அலுவலர்களுக்கு வழித்தட அலுவலர் வழியாக அனுப்பி வைக்க வேண்டும்.

14. முதன்மை கண்காணிப்பாளர், துறை அலுவலர், மற்றும் நிலையான படையினர் இம்மூவரும் தங்கள் தேர்வு மையத்திலுள்ள தேர்வறைகளை ஒவ்வொரு நாளும் சுழற்சி முறையில் சரிசமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும். தேர்வு முடிந்த பின் மாணவர்களை அமைதியாக அறையைவிட்டு வெளியேறச்செய்தல் வேண்டும். அதன்பின்னர் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அறைக் கண்காணிப்பாளர்களுடன், விடைத்தாட்கள் இடப்பட்ட உறையுடன் தேர்வுக் கட்டுக்காப்பு அறைக்குச் செல்ல வேண்டும். கூடுதல் நேரம் சலுகை பெற்று தேர்வெழுதும் தேர்வர்களுக்கான தேர்வறைக் கண்காணிப்பாளர்கள் தேர்வு முடியும் வரை தேர்வறையில் இருக்க வேண்டும். அவ்வறையானது நிலையான Standing Squad உறுப்பினர் மூலம் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும்.

15. பறக்கும் படையினர் தேர்வு மையங்களுக்குச் செல்லும்போது, “பறக்கும்படையினர் குறிப்பேட்டில்’’ முன்பு வந்த பறக்கும் படையினர் குறிப்பிட்டு இருந்த குறைபாடுகள் நீக்கப்பட்டுவிட்டனவா? எனக் கண்டறிந்து அக்குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

16. பறக்கும்படையினர் முதலில் செல்லும் தேர்வு மையத்தில் வினாத்தாள் கட்டு பிரிக்கும்போது பார்வையாளராக இருத்தல் வேண்டும். இறுதியில் செல்லும் தேர்வு மையத்தில் விடைத்தாட்கள் சிப்பம் கட்டும் (packing) போது பார்வையாளராக இருத்தல் வேண்டும்.

17. வழித்தட அலுவலரிடம் விடைத்தாள் கட்டுக்களை ஒப்படைக்கும்போது முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலருடன் பணியில் மூத்த நிலையான பறக்கும் படை உறுப்பினரும் (Standing Squad) இருத்தல் வேண்டும்.

18. <u>பறக்கும்படை உறுப்பினர்கள் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை</u>

அ. பணியின்போது தேர்வர்கள் அச்சமுறும் வகையில் செயல்படக்கூடாது.

ஆ. தேர்வர்களின் மனநிலை, உடல்நிலை, தேர்வெழுதும் நேரம் பாதிக்காத வகையில் செயல்படுதல் வேண்டும். தேர்வர்கள் கண்ணியமாக நடத்தப்படுதல் வேண்டும்.

இ. சந்தேகத்திற்குரிய தேர்வர்களிடம் மட்டும் சோதித்தல் போதுமானது. அனைவரையும் (கட்டாயமாக) சோதித்தல் அவசியம் இல்லை.

ஈ. தவறுகளைக் கண்டுபிடிக்கும்போது விருப்பு, வெறுப்பின்றி கடமை ஆற்ற வேண்டும்.

19. தேர்வு மையத்தில் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபட்ட தேர்வர்கள் எவரேனும் கண்டுபிடிக்கப்பட்டால், அந்நிகழ்வு பற்றிய செய்தியை பறக்கும் படையினரே தன்னிச்சையாக பத்திரிகைத் துறையினருக்கோ, தொலைக்காட்சியினருக்கோ தெரிவிக்கக் கூடாது. முதன்மைக் கல்வி அலுவலர்/மாவட்டக் கல்வி அலுவலர்கள் போன்ற ஆய்வு அலுவலர்களிடம் மட்டும்தான் தெரியப்படுத்துதல் வேண்டும்.

20. பறக்கும் படை உறுப்பினர்களால் தேர்வர்களின் ஒழுங்கீனச் செயல்கள் கண்டுபிடிக்கும் பட்சத்தில் பிற்சேர்க்கை – 6ல் அறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

21. பறக்கும் படை உறுப்பினர்கள் தேர்வு எழுதும் வளாகத்தினை வகுப்பறை மட்டுமின்றி வெளிப்பகுதி மற்றும் கழிப்பறை மற்றும் தளப்பகுதியினையும் பார்வையிட்டு முறைகேடு ஏதும் நடைபெறவில்லை என்பதனை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

22. மையங்களில் ஒழுங்கீன செயல்களில் ஈடுபடும் தேர்வர்கள் கண்டறியப்பட்டால், அவர்களது வினாத்தாள், விடைத்தாள் மற்றும் கைப்பற்றப்பட்ட இதர ஆவணங்களை முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து, உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள அறிவுறுத்த வேண்டும். ஒழுங்கீனச் செயலில் ஈடுபட்ட தேர்வர்கள் அன்றைய தேர்வினை தொடர்ந்து எழுத இயலாது. தொடர்ந்து வரும் இதர தேர்வுகளை எழுத அனுமதிக்கலாம். ஒழுங்கீனச் செயலில் ஈடுபட்ட தேர்வரின் முகப்புச் சீட்டில் Mal என உள்ள கட்டத்தில் சிவப்பு மையினால் ( ✓ ) டிக் செய்யப்பட வேண்டும்.

23. தேர்வு அறையில் ஒழுங்கீன செயலில் ஈடுபடும் தேர்வர் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், முதன்மைக் கண்காணிப்பாளார்கள் கீழ்க்கண்ட ஆவணங்களை அரசுத் தேர்வுத்துறையின் கீழ் செயல்படும் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பிட வேண்டும். எக்காரணங்கொண்டும் விடைத்தாள் சேகரிப்பு மையத்தில் ஒப்படைக்கக் கூடாது.

- தேர்வரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், விடைத்தாள், வினாத்தாள் (தேர்வரின் தேதியிட்ட ஒப்பத்துடன்)
- செய்த தவறினை குறிக்கும் வகையில் தேர்வரின் வாக்கு மூலம்
- தவறு செய்தவரை கண்டு பிடித்தவரின் வாக்கு மூலம்
- அறை கண்காணிப்பாளரின் வாக்கு மூலம்
- தேர்வரின் இருக்கை அறை மாதிரி வரைபடம்
- முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலரின் மேற்கடிதம் /பரிந்துரை

**ஒழுங்கீனச் செயலின் தன்மையும் மற்றும் அது சார்ந்து கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளும்**

ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும் தேர்வர்களுக்கு அவர்கள் புரியும் குற்றத்திற்கு ஏற்ப தண்டனைகள் அளிக்கப்படுவதால் புரிந்துள்ள குற்றம் குறித்து தெளிவாக அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

1. **துண்டுத்தாள் வைத்திருத்தல்:**
தேர்வர்கள் துண்டுத்தாள் / அச்சடித்த குறிப்புகள் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்படும் போது, அன்னார் துண்டுத்தாள் வைத்து மட்டுமே இருந்தாரா, அதைப் பார்த்து விடைத்தாளில் விடைகள் எழுதினாரா என்பதையும் தெளிவாக குறிப்பிட வேண்டும். தேர்வர் வாக்குமூலத்திலும் அறைக்கண்காணிப்பாளர் வாக்குமூலத்திலும் மைய முதன்மை கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலர் அறிக்கையிலும் இதனை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். துண்டுத்தாளில் பதிவெண் குறிப்பிட்டு தேர்வரின் கையொப்பம் பெறுதல் வேண்டும்.

2. **துண்டுத்தாள் வைத்திருந்து அதை பார்த்துத் தேர்வெழுதும்போது பிடிபடுதல்:**

தேர்வர்கள் துண்டுத்தாள் அல்லது அச்சடித்த குறிப்புகள் வைத்திருந்து அதை பார்த்து எழுதும்போது பிடிபட்டிருந்தால் தேர்வர் துண்டுத்தாள்களை பார்த்து விடைகளை விடைத்தாளில் எழுதும்போது பிடிக்கப்பட்டார் என தெளிவாக அறிக்கையில் குறிப்பிட வேண்டும். தேர்வர் துண்டுத்தாளிலிருந்து விடைத்தாளில் எழுதிய பகுதியை விடைத்தாளிலும், துண்டுத்தாளிலும் பச்சை/சிகப்பு நிற மையினால் குறிப்பிட்டு காட்ட வேண்டும். தேர்வர் மற்றும் அறைக்கண்காணிப்பாளர் வாக்குமூலத்திலும் துண்டுத்தாளை பார்த்து விடைகள் எழுதும்போது பிடிக்கப்பட்டதாக குறிப்பிட வேண்டும்.

3. **விடைத்தாள் பரிமாற்றம் செய்து ஒழுங்கீன செயலில் ஈடுபடுதல்:**

விடைத்தாள் பரிமாற்றம் செய்து ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடுவது மிகவும் கடுங்குற்றமாகும். தேர்வர்களுக்குள் விடைத்தாள் பரிமாற்றம் செய்து தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும்போது பிடிக்கப்பட்டால் எந்தத் தேர்வரின் விடைத்தாள் மாற்றம், எந்தத் தேர்வரிடம் இருந்தது எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாற்று விடைத்தாள் கொண்டு தேர்வெழுதியபோது கண்டுபிடிக்கப்பட்ட விடைத்தாள் மீது எந்த பதிவெண் கொண்ட தேர்வரிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டது எனக் குறிப்பிட்டு அறைக்கண்காணிப்பாளர் கையொப்பமிட வேண்டும். முதன்மைக் கண்காணிப்பாளரும், துறை அலுவலரும் மேலொப்பம் இட வேண்டும்.

4. **ஆள்மாறாட்டம்:**
ஆள்மாறாட்டம் செய்து தேர்வெழுதும் ஒழுங்கீனச் செயல்கள் கண்டுபிடிக்கப்படும்போது காவல்துறையினருக்கு உடனடியாக புகார் தெரிவித்து வழக்கு பதிவு செய்து அரசுத்தேர்வுத்துறைக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலினை இணை இயக்குநர் மேல்நிலை/பணியாளர் அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தேர்வரின் பதிவெண், பெயர், வீட்டு முகவரி, ஆள்மாறாட்டம் செய்து தேர்வெழுதியவர் பெயர், வீட்டு முகவரி போன்ற தகவல்களுடன் விரிவான அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

5. தேர்வர் இதர ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும்போது, இவர்கள் ஈடுபட்ட ஒழுங்கீனச் செயல்கள் குறித்து விவரமாக அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

6. தேர்வு மையத்தில் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபட்ட தேர்வர்கள் குறித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திலும் (பிற்சேர்க்கை–6) விவரங்கள் அறிவிக்கப்பட வேண்டும். இவ்வறிக்கையின் ஒரு நகலை பள்ளியில் வைத்துக் கொண்டு, ஒரு நகலை மற்ற ஆவணங்களுடன்சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள்உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குஅனுப்ப வேண்டும். பறக்கும் படையினர்களால் கண்டுபிடிக்கப்படும்போது ஒரு நகல் பறக்கும் படையினருக்கு கொடுக்கப்பட வேண்டும்.

7. தேர்வர்களின் வாக்குமூலம் தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர பிற மொழிகளில் இருப்பின் (குறிப்பாக மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகள்) அதற்கான மொழி மாற்றம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரால் மேலொப்பமிட்டு சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

## தேர்வுகளில் ஒழுங்கீனச் செயலில் ஈடுபடுவோர் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள்:–

| Nature of Offence (1) | | Scale of Punishment (3) |
|---|---|---|
| 1. | Candidates who has in his possession printed books, notes or manuscripts bearing on the subject of the examination but who voluntarily surrenders them without being detected by the Superintendent. | Warning by the Chief Superintendent. If there is repetition of this in the same session of the same examination, the candidate may be expelled after obtaining an on – the – spot written explanation. Subsequent papers may still be answered. The facts should be reported to the Secretary, Board of Higher Secondary Examination, Chennai – 600 006. |
| 2. | A Candidate who is discovered by the Superintendent to be in possession forbidden materials such as printed books, notes or manuscripts etc., but the candidate is not found to have made use of the forbidden material. | Expulsion by the Chief Superintendent after obtaining an on the spot written explanation. Subsequent papers may still be answered. The Scripts and objectionable matter should be sent to concerned District Assistant Director of Government Examinations Cancellation of performance at the examination in case the candidate has not made use of the objectionable matter and cancellation of performance at the examination and debarment for one year, i.e., two subsequent examinations in case the candidate has made use of the objectionable matter. |
| 3. | A candidate detected copying from another candidate or taking help from any in the examination hall or from outside | Expulsion by the Chief Superintendent after obtaining an on the spot written explanation. Subsequent papers may still be answered. Cancellation of performance at the examination and debarment for more than one year. i.e. more than two subsequent examinations depending upon the circumstances and the nature of evidence. |

| | | |
|---|---|---|
| 4. | A Candidate FOUND GUILTY of copying, attempting to copy from the forbidden papers. | Cancellation of marks at the particular whole session of Examination besides debarring him for the NEXT TWO examinations. |
| 5. | Candidate or his associates influencing the Examiners or other connected in the examination work. | DEBARRING the candidate for specific period, depending on the circumstances and the nature of evidence. (Punishment should be more than Rule No.4) |
| 6. | Impersonation cases | Cancellation of performance at the examination and debarring permanently. |
| 7. | Substitution of answer books. | Cancellation of performance at the examination and debarring for a specified period (more than RULE No.4) |
| 8 | Candidates writing objectionable abusive or offensive language, or letters to the examiners requesting them to award pass marks etc. and to the Office of the Director of Government Examinations, Chennai-6. | Cancellation of the performance at the examination or the particular examination. |
| 9. | Misbehaviour of the candidate towards invigilating staff of the examination centre including assault on the invigilation staff either in the examination hall or outside the centre. | Expulsion of the candidate and also not allowing him to sit for the subsequent examination as per the discretion of the Chief Superintendent OR cancellation of performance at the examination and debarring the candidate of specific period or permanently. |
| 10. | Taking away the answer books or leaving the examination hall without handing over the answer books to the invigilator whether returned subsequently or not. Candidate tearing the scripts in the hall. | Cancellation of performance in the examination besides the candidate being warned by the Chief Superintendent. |
| 11. | Sending out the Question paper | Cancellation of performance at the examination and debarment upto a period of three years i.e. six subsequent examinations. |
| 12. | Refusal to offer and on the spot explanation to the invigilator or Chief Superintendent. | Cancellation of performance at Examination besides debarring for the subsequent examination. |
| 13. | Copying detected on the basis of internal evidence such as:-<br>(a) During Valuation &<br>(b) During Special Scrutiny | Cancellation of performance besides debarring for two subsequent examinations. |
| 14. | Exchange of change of Roll Numbers on the answer scripts with a view to give or take help or change of answer books with another candidate. | Cancellation of performance besides debarring the candidate for a maximum period of five years i.e. 10 subsequent examinations |
| 15. | Writing names, initials, other marks of identification on outside the answer scripts and additional answer books. | A warning or cancellation of performance if necessary after obtaining the explanation of the candidate depending on the circumstances. |
| 16. | Throwing of question paper after writing the answer on it, to the other candidate | Cancellation of performance |

Sd/-

**DIRECTOR**